**கவனிக்க.**- இவ்வர்த்தமானப் பத்திரிகையின் சிங்கள, ஆங்கிலப் பிரதிகள் வெவ்வேறாகப் பிரசுரிக்கப்படுகின்றன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2016/31 - 2017 අප්‍රේල් මස 26 වැනි බදාදා - 2017.04.26

*2016/31 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்*

*பிரிவு 4 (2) இன் கீழான பிரசுரிப்பு*

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பிடப்படும்) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 1995 ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரித்துள்ள இலங்கை கணக்கீட்டு நியமம் (40) - முதலீட்டு ஆதனங்கள் நியமத்திற்கான திருத்தங்களை 2018 சனவரி 01ஆந் திகதியிலிருந்து கடைபிடிக்கின்றது. இத்திருத்தங்கள் இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலத்தை அடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது. முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்படும்.

பேரவையின் கட்டளைப்படி,

அருண அல்விஸ்,
செயலாளர்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இல. 30 A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2017, ஏப்பிறல் 26.



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**இ.க.நி40 - முதலீட்டு ஆதனம் நியமத்திற்கான திருத்தங்கள் - 01 சனவரி 2018 இல் இருந்து நடைமுறைக்கு வரும்.**

**முதலீட்டு ஆதனங்களை மாற்றுதல்**

**இ.க.நி 40 - முதலீட்டு ஆதனங்களுக்கான திருத்தங்கள்**

பந்திகள் 57 - 58 திருத்தப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட குறிப்புக்கள் குறுக்குக் கோடிட்டும் புதிய குறிப்புக்கள் அடிக்கோடிட்டும் காட்டப்பட்டுள்ளன.

**மாற்றல்கள்**

57 முதலீட்டு ஆதனத்தின் பாவனையில் மாற்றம் சான்றுபடுத்தப்படும் போது ஏற்படும் போது மாத்திரமே ஒரு நிறுவனம் ஆதனத்தை முதலீட்டு ஆதனத்திற்கு அல்லது முதலீட்டு ஆதனத்திலிருந்து மாற்றும். பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்படும். ஆதனமொன்று முதலீட்டு ஆதனத்திற்கான வரையறையை பூர்த்தி செய்வதுடன் அல்லது அந்த வரையறையை பூர்த்தி செய்தல் முடிவுக்கு வருவதுடன், மாற்றமொன்றிற்கான ஆதாரமும் காணப்படின், பாவனையில் மாற்றம் ஏற்படும். சொத்தின் பாவனை தொடர்பில், தனியே நிர்வாகத்தின் நோக்கத்தில் ஏற்படும் மாற்றம் மாத்திரம் பாவனையில் ஒரு மாற்றத்திற்கான ஆதாரத்தை வழங்காது. பாவனையில் ஒரு மாற்றத்திற்கான ஆதாரம் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:

(அ) முதலீட்டு ஆதனத்திலிருந்து உரிமையாளர் பயன்பாட்டு ஆதனமாக மாறுவதற்கு, உரிமையாளர் பயன்பாட்டின் தொடக்கம், அல்லது உரிமையாளர் பயன்பாட்டுக்கான நோக்குடன் அபிவிருத்திக்கான தொடக்கம்.

(ஆ) முதலீட்டு ஆதனத்திலிருந்து தொக்குகளாக மாறுவதற்கு விற்பனை நோக்குடன் அபிவிருத்தியினை ஆரம்பித்தல்.

(இ) உரிமையாளர் பயன்பாட்டு ஆதனத்திலிருந்து முதலீட்டு ஆதனமாக மாறுவதற்கு உரிமையாளர் பயன்பாட்டின் முடிவு அல்லது அத்துடன்,

(ஈ) தொக்குகளிலிருந்து முதலீட்டு ஆதனமாக மாறுவதற்கு, வேறொரு தரப்பினருக்கு தொழிற்பாட்டுக் குத்தகையின் தொடக்கம் ஆரம்பம்.

(உ) (நீக்கப்பட்டுள்ளது)

58 பாவனையில் தோன்றும் ஒருமாற்றமானதுவிற்பனை நோக்குடனான அபிவிருத்தி தொடக்கத்தினால் ஆதாரப்படுத்தப்படும் போதுமட்டுமே ஒரு நிறுவனம் ஒரு ஆதனத்தை முதலீட்டு ஆதனத்திலிருந்து தொக்காக மாற்றவேண்டுமென பந்தி 57(ஆ) தேவைப்படுத்துகின்றது. ஒருநிறுவனம் அபிவிருத்தி இல்லாது ஒருமுதலீட்டு ஆதனத்தினை அகற்றுவதற்கு தீர்மானிக்கும்போது அதனை ஏற்பிசைவுவிலக்கல் செய்யும் வரை (நிதிநிலைமைக் கூற்றில் இருந்து அகற்றுதல்), அது அந்த ஆதனத்தை ஒரு முதலீட்டு ஆதனமாகவே கருதுவதுடன், அதனைதொக்காக மீள்வகைப்படுத்தாது கருதாது. அவ்வாறே ஒரு நிறுவனம் முதலீட்டு ஆதனமாக எதிர்கால பயன்பாட்டை தொடர்வதற்காக தற்போதைய முதலீட்டு ஆதனத்தின் மீள்அபிவிருத்தியை தொடங்குமாயின், அந்த ஆதனம் மீள் அபிவிருத்தி காலப்பகுதியில் உரிமையாளர் பயன்பாட்டு சொத்தாக மீள்வகைப்படுத்தப்படாது தொடர்ந்து முதலீட்டு ஆதனமாகவே கொள்ளப்படும்.

பந்தி 84 (இ)-84(உ) மற்றும் அவை சார்ந்த தலைப்புகளும் பந்தி 85(எ) உம் சேர்க்கப்பட்டுள்ளன.

**இடைக்கால ஏற்பாடுகள்**

**முதலீட்டு ஆதனங்களை மாற்றுதல்**

84(இ) 2017 சனவரி யில் கடைப்பிடிக்கப்பட்ட முதலீட்டு ஆதனங்களை மாற்றுதல் (இ.க.நி40 இக்கான திருத்தங்கள்), பந்திகள் 57-58 இனை திருத்தியுள்ளன. ஒரு நிறுவனம் இந்தத் திருத்தங்களை உரிமம் இத்திருத்தங்களை, முதன் முதலில் பிரயோகிக்கும் (ஆரம்பப் பிரயோகத் திகதி) நிதியறிக்கையின் காலப்பகுதியின் தொடக்கத்தில் அல்லது அதன் பின்னரான காலப்பகுதியில் ஏற்படும் பயன்பாட்டு மாற்றங்களுக்கு பிரயோகிக்கும். ஆரம்ப பிரயோக திகதியில், நிறுவனம் அத்திகதியில் வைத்திருந்த ஆதனங்களின் வகைப்படுத்தலை மீள்மதிப்பு செய்வதுடன், பொருத்தமான இடத்து, அத்திகதியில் நிலவும் நிலைமைகளை பிரதிபலிக்கும் வகையில் பந்திகள்7-14 ஐ பிரயோகித்துஆதனத்தினை மீள் வகைப்படுத்தும்.

84(ஈ) பந்தி84(இ) இன் தேவைப்பாடுகள் எவ்வாறு இருப்பினும், ஒருநிறுவனம் பந்திகள் 57-58 இக்கான திருத்தங்களை, பிற்காட்சி பயன்பாடு இல்லாமல் சாத்தியமானால் மட்டுமே, இ.க.நி8 இக்கு அமைய கடந்த காலங்களில் இருந்து நடைமுறைக்குவரும் வகையில் பிரயோகிப்பதற்கு அனுமதியளிக்கின்றது. இது.

84(உ) பந்தி84(இ) இக்கு அமைய ஆரம்பப் பிரயோகத் திகதியில் நிறுவனம் சொத்தினை மீள் வகைப்படுத்துமேயாகில் அது பின்வருவனவற்றை மேற்கொள்ளும்:

(அ) பந்திகள் 59 - 64 இலுள்ள தேவைப்பாடுகளை பிரயோகித்து மீள்வகைப்படுத்தலுக்கான கணக்கீட்டை மேற்கொள்ளும். பந்திகள் 59 - 64 இனை பிரயோகிக்கும் போது அந்நிறுவனம் பின்வருவனவற்றை மேற்கொள்ளும்:

(i) ஆரம்பப் பிரயோகத் திகதியாக பயன்பாட்டு மாற்றத் திகதி பற்றிய குறிப்பீடு ஏதும் இருப்பின் அதனை வாசித்தல். மற்றும்

(ii) பந்திகள் 59 - 64 இக்கு அமைய இலாபநட்டத்தில் ஏற்பிசைவு செய்த எந்தவொரு தொகையையும் ஆரம்ப பிரயோக திகதியில் கைக்கொள் இலாபத்தின் ஆரம்ப மீதியில் ஒரு சீராக்கமாக ஏற்பிசைவு செய்தல்.

(ஆ) பந்தி84(இ) இக்கு அமைய முதலீட்டு ஆதனத்திற்கு அல்லது முதலீட்டு ஆதனத்திலிருந்து மீள்வகைப்படுத்திய தொகைகளை வெளிக்காட்டுதல். நிறுவனம் பந்திகள் 76 மற்றும் 79 இல் தேவைப்படுத்தியவாறு, காலத்தின் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் முதலீட்டு ஆதனத்தின் முன்கொணரப்படும் மீதிகளின் கணக்கிணக்கத்தின் ஒரு பகுதியாக மீள்வகைப்படுத்தப்பட்ட தொகைகளை வெளிக்காட்டும்.

**நடைமுறைக்கு வரும் திகதி**

85(ஊ) 2017 ஜனவரியில் கடைப்பிடிக்கப்பட்ட முதலீட்டு ஆதனங்களின் மாற்றல்கள் (இ.க.நி40 இக்கான திருத்தங்கள்), பந்திகள் 57-58 இனை திருத்தியும் பந்திகள் 84(இ)-84(உ) இனை சேர்த்தும் உள்ளன. ஒரு நிறுவனம் 2018 சனவரி 01 ஆந் திகதி அல்லதுஅதற்கு பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டு காலப்பகுதிக்கு இந்தத் திருத்தங்களை பிரயோகிக்கும். முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது.அத்திருத்தங்களை, ஒரு நிறுவனம் முன்கூட்டிய காலப்பகுதிக்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மையை அது வெளிக்காட்டும்.

09-275